# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 6 | 8 | 0 |
| 6 மாதம் | ரூ. | 3 | 4 | 0 |

"போர்வாள்" நிலையம்
பவழக்காரந் தெரு,
சென்னை 1.

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
இரா. இளஞ்செழியன், B.A. (Hons.).

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

வாள் 4

சென்னை; திருவள்ளுவர் ஆண்டு 1982 மாசி 26
10—3—51 சனிக்கிழமை

வீச்சு 27

# குடியைக் கெடுக்கிறது குதிரைப் பந்தயம்!

## ஆனாலும் அதை ஒழிக்காதே என்கிறது டில்லி ஆட்சி!



மக்கள் வாழ்வை நசுக்கி நாசமாகி வருகிறது குதிரைப் பந்தயம்! என்றாலும், அதை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று சென்னை ஆட்சியாளர்களுக்கு டில்லி ஆட்சியாளர்கள் தாக்கீது விடுத்திருக்கின்றனராம். ஏன்? யார் அறிவார் பராபரமே!!

# வளம் நிறைந்த நாட்டில் வறுமைக் கொடுமையா?

## வடநாட்டுக்கு வாழ்வு! தென்னாட்டுக்குத் தாழ்வா?

## ஏன் என்று கேட்டால், "இந்தா சிறைவாசம்" என்பதா?

(*)

### மாயவரத்தில் ஜீவரத்தினம் வீரமுழக்கம்

★

மாயவரத்தில் மார்ச் 3, 4 தேதிகளில் நடைபெற்ற தஞ்சைமாவட்ட தி.மு.க. மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய சென்னை நகராட்சி உறுப்பினர் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் சில பகுதிகள் வருமாறு.

பேரன்புடையீர்!

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டிற்கு நான் தலைமை தாங்கக் கட்டளை இடப்பட்டுள்ளதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பொறுப்பு நான் கொஞ்சம்கூட எதிர்பாராத முறையில் ஆச்சரியத்தைக் கொடுத்தது. தஞ்சை மாவட்டம் தென்னாட்டு அரசியல் உணர்ச்சியிலே தலை சிறந்தது ஆகும். பல அரசியல் கட்சி மேடைகளின் மூலம் அந்தந்த அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், வழி முறைகளையும் பல முறை கேட்டுக் கேட்டுத் தெரிந்த மாவட்டம்; அதுபோலவே பழமைக் காலம் தொட்டு மதத்தின் மடமையும், மடாதிபதிகளும் உடைய மாவட்டம், ஆனால் பல புது உலகச் சிந்தனைச் சிற்பிகளின் சீர்திருத்தப் பிரசாரங்களையும், கருத்துக்கள் நிறைந்த எழுத்துக்களையும் கேட்டும், படித்தும் தெளிவு பெற்றுள்ள மாவட்டம்; எத்துறையிலும் சீரும், சிறப்பும் பெற்ற இந்தத் தஞ்சை மாவட்டத்தின் திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டிற்கு நான் தலைவனாக இருப்பது எனக்குப் பெருமைக்குரியதே ஆகும். எனக்கு இந்தப் பெருமையை அளித்த தஞ்சை மாவட்டத்திற்கு எனது நன்றி உரித்தாகுக.

திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது திராவிடர் இயக்கமோ அதன் கண் மணிகளான வீரர்களைப் பட்டி தொட்டிகள் எங்கும் பாசறை அமைக்கச் செய்து பகுத்தறிவுப் பிரசாரத்தின் மூலம் மக்கள் நல்வாழ்விற்குப் பணியாற்றச் செய்வானேன்? உலகம் தோன்றிய நாள் முதல் மனிதன் உற்பத்திக் காலம் தொட்டு, மனிதன் இயற்கையைத் தன் வசப்படுத்த முயற்சிப்பதும், பயத்தால் உண்டான மடமையால் எத்தகைய மாற்றத்தையும் விரும்பாமல் மாற்றம் விரும்பி முன்னேறும் மனித வர்க்கத்தை தடைசெய்து ஆதிக்கத்தைப் பெருக்க முயற்சிப்பதும் வழக்கமாக இருந்து கொண்டே வருகிறது என்பதைச் சரித்திர வாயிலாகவும், நடைமுறையிலும் காண்கிறோம். இயற்கையின் வளமையை மனித வர்க்கத்திற்குப் பயன்படுத்த முயற்சித்தவர்கள் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள்; உயிர் இழந்து இருக்கிறார்கள் என்றும் படித்திருக்கிறோம், காண்கிறோம். பழமையிலிருந்து புதுமைக்கு இடம் வகுக்கும் பொழுதெல்லாம் இந்த இடைஞ்சல்களும், கொடுமைகளும், உயிர்த்தியாகங்களும், மிகப்பொதுப்படையான செய்திகளாகவே கொள்ளத் தக்கவை

#### நாகரிகத்தின் சிந்தனைச் சிற்பிகள் நாம்

சிந்தனைவயப்படும் மனிதனின் சீர்திருத்த ஆர்வமும் ஆவேசமும் கோழைகளையும் வீரர் ஆக்குதது இயல்பு. இப்படிப் பட்ட சிந்தனைச் சிற்பிகள் சிந்திய இரத்தத்தின் பிரதிபிம்பம்தான் இன்றைய உலகின் வளம்பொருந்திய வாழ்வு. பயத்தால் மடமையில் ஆழ்ந்து மற்றவர்களையும் கொடுமைகளுக்கு ஆளாக்கிய கும்பலின் கோரக் காட்சிதான் வறுமையும், பிணியும், அநாகரிகமும் ஆகும். உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பல்வேறு நாகரீகத்தில் மூழ்கி தட்பவெப்ப

வலிமைக்கு ஏற்ற உடல் நிலைக் கட்டுப்பாடுகளை உடைய மக்கள் அவரவர்கள் சூழ்நிலையின்படி, சிந்தனைச் சிற்பிகளான சீர்திருத்தச் செம்மல்களால் குறைவு அற்ற—அறிவு நிறைந்த சுதந்தரத்தைப் பெற்று, இன்ப வாழ்வு வாழ்கிறார்கள். நாமோ எனில், மடமையில் மூழ்கி, வறுமையால் வாடி வதைபடுகிறோம். இது இனி சகிக்க முடியாத கொடுமை.

## ஏன் இந்த நிலை?

நாம் இப்படி மடமையிலும், வறுமையிலும் வாடி வதைவானேன்? நம் நாடு என்ன எஸ்கிமோக்கள் வாழும் பனிக்கட்டிப் பரப்பா? மனித சஞ்சாரம் இல்லாத ஆப்பிரிக்கக் காடுகளா? மனித உற்பத்திக் காலத்தில் இருந்து அறிவிற்கு ஆதாரமாய் இருந்த அறிஞர்கள் பிறந்த நாடு என்று பிறமொழியாளரும், பிறதேசத்தாரும் சரித்திர வாயிலாகச் சான்றுகள் கூறக் கேட்டுக் களிப்பு அடைகின்றோமே! நம்முடைய நாட்டிற்குத் திருவிடம் (திராவிடம்) அழகிய இடம் என்று பெயரிட்டு அழைத்தார்கள் என்று அந்த நாளிலேயே கூறக் கேட்டு ஆனந்தம் அடைகிறோமே! வற்றாத ஜீவநதிகள் நம் நாட்டின் குறுக்கு நெடுக்காகப் பாய்வதைக் கண்டு பரவசம் அடைகின்றோமே! உலகத்தார் உழுதுண்டு பயிர் செய்து பயன் அடையத் தெரியாத காலத்திலேயே, உழுது பயிர் செய்து, உண்டு களித்துப் பரவசம் அடைந்து, "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை; பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்று கூறும் அளவிற்கு ஆளாகிப் "பொங்கல்" திருநாளைப் போற்றி வாழ்ந்து வந்தோமே!

உலகத்தில் மற்றவர்கள், இன்னும் அடைய முடியாத உயர் நீதி முறையில்—மனித வர்க்கத்தில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை நன் முறையில் நிலைநாட்டி வாழ்ந்தோமே! ஆனால் அறிவுக்கும், ஆண்மைக்கும் அடிப்படை திருவிடத்தின் (திராவிடத்தின்) நாகரிகம் என இன்றும் மறுக்க முடியாத அளவு உலகோர் ஒப்புக்கொண்டபின், நாம் ஏன் இந்த நிலையில் வந்தோம்? ஏன் இந்த நிலையில் தாழ்ந்தோம்?

திராவிட நாகரிகத்தின் காலடியைக்கூட எட்டிப் பிடிக்க முடியாத ஆரிய நாகரிகத்தில் அமோக மோகமும் அதன் பயனாக, அதன் வஞ்சக வலையில் சிக்கியதுமே நம் வாழ்வின் வீழ்ச்சிக்குக் காரணம் ஆயிற்று. வேறு எதிலும் வெல்ல முடியாது என்று கண்ட ஆரியம் கடவுள், மதம், புராணம், இதிகாசங்கள் மூலம் நம்மை ஏமாற்றிவிட்டது. நம்முடைய ஒன்றுபட்ட வாழ்வில் தனக்கு எப்பொழுதுமே ஆபத்து உண்டு என்று கண்ட ஆரியம்—நாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உலகு உள்ள அளவும் ஒன்றுபடாது இருக்கத் திட்டம் இடுவதே தன் இலட்சியம் எனக் கொண்டது. ஆரிய நாகரிகத்தின் அம்சங்கள் ஒவ்வொன்றும் இத் திட்டமே தன் உயிர் நாடி எனக்கொண்டதால் இந்நாட்டின் சகல துறைகளிலேயும் இந்தப் பிரித்து ஆளும் திட்டத்தின் பலன், திராவிட இனத்தின் நாடி நரம்புகள் எல்லாம் ஓடிப்பாய ஆரம்பித்து. நாம் அடிமை மனப்பான்மை உடையவர்களானோம் அதன் எதிரொலியே — உழைக்கும் நம் இனம் உறங்கிக்கிடக்கவும்-உன்மத்தராய் உருக்குலைந்து தவிக்கவும், உழைக்காத ஒரு இனம் உல்லாச வாழ்க்கையில் வாழவும் வழி ஏற்பட்டுவிட்டது.

## நம் பகுத்தறிவுப் படை

கொடுமையிலும், வறுமையிலும் குணமும் வழியும் பிறப்பது பொதுநீதி. ஆயினும் இந்நிலையைக் கொஞ்சம்கூட நம் நாட்டில் காண முடியவில்லை. வெள்ளையன் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் ஓர் அளவு உலக நாகரீகம் பரிமாறப்பட்ட காரணத்தால், மனித உரிமையின் உணர்ச்சி உள்ளத்தில் ஊடுருவிப் பாய ஏதுவாயிற்று. அதைத் தெளிவாய் உணர்ந்த ஆரியம் இந்துமதத்தின் பெயரால் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பி, தன் வாழ்வினுக்குச் சட்டத் திட்டங்களைக் கட்டுப்படுத்தியது. அதன்படி இந்துமதத்தின் கோட்பாட்டிற்குள் பலவந்தமாக அடக்கப்பட்ட மக்களுக்குச் சர்க்கார் நீதியை வழங்க முடியாதபடி ஒருபுறம் ஏற்பாடும் செய்துகொண்டு, மறுபுறம் வெள்ளையன் ஆட்சிநலனுக்காக ஒன்று சேர்க்கப்பட்ட, மொழியால், நாகரிகத்தால், பண்பாடுகளால், வெட்ப தட்பத்தால் வேறுபாடு உடைய பல இன மக்கள் கொண்ட இந்திய உபகண்டத்தையும் அவர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள். ஆளும் வர்க்கத்தின் அரசியல் ஞானமும், உலக நாகரிகமும் பல சிந்தனைச் சிற்பிகளையும், விடுதலை வீரர்களையும் படம் பிடித்துக் காட்டியதால் நம் உள்ளத்தில் பகுத்தறிவு பற்றலாயிற்று.

ஆட்சியின் நலனுக்காக ஆங்கிலேயன் அமைத்த முறை ஆரியரின் ஆதிக்கத்திற்கு ஓர் அளவு அசைவும் கொடுக்க ஆரம்பித்தது. இந் நிலையில் நம் இன எழுச்சிக்கும், நல்வாழ்விற்கும் பகுத்தறிவே தகுந்த மருந்து என்று கருதிய பெரியார்

(14-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் 4 | திருவள்ளுவர் ஆண்டு 1981 மாசி 26<br>10—3—51 சனிக்கிழமை | வீச்சு 27 |
|---|---|---|


# எழுத்துரிமைப் போராட்டம்!

★

## மட்டற்ற உற்சாகம்! மகத்தான வெற்றி!

—()—

### வடார்க்காடு வழிகாட்டுகிறது!

★

வேலூர்
திருப்பத்தூர்
வந்தவாசி
அம்மையப்பட்டு
பொன்னமல்லூர்
தேசூர்
தென்னூர்
ஆர்க்காடு
திமிரி
பூட்டுத்தாக்கு
மருதாடு
புன்னை
கொடுங்காலூர்
போளூர்
கலவை
சந்தைப்பேட்டை
பேர்ணம்பட்டு
வனத்தூர்
குடியேற்றம்
கீழ்வழித் துணையாங்குப்பம்
காட்டுப்பாடி
ஆம்பூர்
ஊசூர்
தொரப்பாடி
பள்ளிகொண்டை
ஒடுக்கத்தூர்
திருவத்திபுரம்
அசனம்மாப்பேட்டை
வாழ்குடை
உக்கல்
சித்தாத்தூர்
புரிசை

வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இத்தனை ஊர்களிலும், மார்ச் முதல் தேதியன்று, எழுத்துரிமைப் போராட்டம், மிகச் சிறப்பாகவும் மட்டற்ற உற்சாகத்துக்கிடையேயும், வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது.

ஒரு ஜனநாயக நாட்டில், அந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான அடிப்படை உரிமைகள், பேச்சுரிமையும் எழுத்துரிமையும் ஆகும்.

மக்கள் நன்மைக்காக மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படும் மக்கள் ஆட்சி எதுவும் மக்கள் மன்றத்திற்கு இந்த உரிமைகளைத் தர ஒருபோதும் மறக்காது.

ஒரு நாட்டில் ஜனநாயக மணம் கமழ்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிவதற்கான கருவியேகூட, அந்த நாட்டில் எழுத்துரிமையும் பேச்சுரிமையும எந்த அளவுக்கு நிலவுகின்றன என்பதுதான் ஆகும்.

எந்த நாட்டில் எழுத்துரிமையும் பேச்சுரிமையும் ஆளந்தார்களால் பறிக்கப்பட்டு விடுகின்றனவோ, எந்த நாட்டில் தங்கள் உள்ளக் கருத்துக்களை ஊர் மக்களுக்கு எடுத்துரைக்கின்ற உரிமை அந்த நாட்டுப் பிரஜைகளுக்கு இல்லாமல் இருக்கின்றதோ, எந்த நாட்டில் பொதுக் கூட்டங்கள் தடுக்கப்பட்டு, புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, நாடகங்களுக்கு 144 விதிக்கப்பட்டு, கவிதை ஏடுகளுக்குத் தடை உத்திரவு போடப்படுகிறதோ, அந்த நாட்டில் ஜனநாயக ஒளி வீசாது; சர்வாதிகார வாடைதான் வீசும். பாசிசப் புயல்காற்றுதான் சுழன்று சுழன்று அடிக்கும்.

நம் நாட்டை ஆள்பவர்கள், சென்ற சில ஆண்டுகளாக, ஜனநாயகப் பாதையைப் புறக்கணித்துவிட்டு, பாசிசப் பாட்டையில்தான், வேக வேகமாகத் தங்கள் அரசியல் பயணத்தை நடத்திவருகிறார்கள். மக்கள் மன்றத்தின் முக்கியமான உரிமைகளை மட்டந்தட்டுவதிலேயே தங்கள் முழு நினைவையும் செலுத்திவருகிறார்கள்.

"ஆரிய மாயை" போன்ற அருமையான பல நூல்களைத் தடை செய்திருக்கிறார்கள்.

"தூக்குமேடை" முதலான செந்தமிழ் நாடகங்களுக்கு 144 விதித்திருக்கிறார்கள்.

"இராவண காவியம்" அனைய எழில்மிகு ஏடுகளுக்குத்

(13-ம் பக்கம் பார்க்க)

சிறு கதை

# முதல் முத்தம்

[ வேலை வில்லவன் ]

அந்த வேப்பமரத்தடியிலே தனிமையாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஆம். என் உள்ளக்கூட்டைவிட்டுஓடிவிட்ட சித்திரைக் கிளியை அழைத்துக்கொண்டிருந்தேன். அப்பைங்கிளி, கடந்த காலமென்னும் மரத்தின் உச்சிக் கிளையில் உட்கார்ந்துகொண்டு காதற்கனவுகள், மனக்கோட்டைகள் முதலிய பழங்களைக் கொத்திக் கொண்டிருந்தது. அக்கிளி அந்தப் பழங்களைக் கொத்திக் கொண்டிருந்தது எனக்குப் பிடிக்கவில்லை. அரசியல், சமூகம் முதலிய பழங்களைக் காட்டி அதை அழைத்தேன். ஆனால் அது என்னைச் சட்டைசெய்யவில்லை. அந்தப் பழங்களைக் கொத்துவதை நிறுத்தவில்லை! ......அந்தக் காட்சியை மனக்கண்ணால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை என்னால். வேதனை வலியால் உந்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அதனின்றும் தப்பமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன்.

"என்னப்பா இப்படித் தனிமையாகப் பேயறைந்தவனைப் போல உட்கார்ந்து கொண்டிருக்கிறாயே!.......

"என்ன சிந்தனை?...

"அட, கண்ணீர்கூட வடிகிறதே! என்னப்பா விஷயம்?"... நண்பன் கேட்டுக்கொண்டேயிருந்தான்!--கிளறிக்கொண்டேயிருந்தான் துக்கக் குப்பையை!—தூண்டிவிட்டுக் கொண்டேயிருந்தான் வேதனைத் தீயை!

"ம், ம்?...என்ன?......" தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டவன் முகத்தைச் சுளித்தும் நெளித்தும் கேட்கும் இக்கேள்வியைக் கேட்டேன்.

"சரிதான்!....இவ்வளவு நேரமாக நான் கேட்டுக்கொண்டிருந்த கேள்விகள் உன் காதில் விழவில்லையா?....என் இப்படித் தனிமையாக உட்கார்ந்து கொண்டு வருத்தத்தையும் வேதனையையும் வலிய கூப்பிட்டுக்கொண்டும், அழுகையை அழைத்துக்கொண்டும் இருக்கிறாய் என்றுதான் கேட்டேன்!.... வீட்டை நினைத்துக் கொண்டாயா?......" அக்கறையோடு அன்புமொழியால் கேட்டான் குமார்.

"ஒன்றுமில்லையே!.......நான் அழவில்லையே!" மழுப்பினேன். மறைத்தேன்.

"ஏனப்பா மறைக்கிறாய்? உன் வாய் உனக்குச் சாதகமாகப் பேசினாலும் உன் கண்கள் உன்னைக் காட்டிக்கொடுத்துவிடுகின்றனவே!......" கண்டு கொண்டான்! கருத்தைக் கலக்கினான்!

"கண்கள்!......இவை இன்னும் எதற்கு நண்பா எனக்கு?... அவை கண்டுகளிக்கவேண்டிய கட்டித்தங்கம் — கற்பகத்தரு கோமேதகம் — ஒளிமுத்து — ஒப்பற்ற ரத்தினம் — உன்னத வைடூரியம் — இணையில்லா மாணிக்கம் இந்த உலகிலே இல்லாத பொழுது?....ஆம். இனிக் கண்ணீரைக் கொட்டிக்கொண்டிருப்பதுதான் அவற்றின் ஒரே வேலை!......" உளறினேன்!— உணர்ச்சியோடு!

"நண்பா, நீ என்ன சொல்லுகிறாய்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!...." வினவினான். விளக்கம் கேட்டான். உட்கார்ந்துகொண்டான் என் அருகில்.

"விளங்காது நண்பா விளங்காது! என் மன வேதனை உனக்குமட்டுமல்ல இந்த உளுத்துப்போன சமுதாயத்திற்கே விளங்காது!........விளங்கியிருந்தால் என் மாணிக்கம் மறைந்திருக்குமா? அழகுச் சித்திரம் அழிந்திருக்குமா?.. ..." உளறினேன்!—வேதனை மூச்சோடு!

"என்ன நண்பா! என்னென்னவோ பேசுகிறாயே!...யாரை நினைத்துக் கொண்டாய்?......." உருக்கமாகக் கேட்டான்!— விருப்பத்தோடு

"ஆம் நண்பா! நினைத்துக் கொண்டேன்!...எப்படி நினைத்துக்கொள்ளாமலிருக்க முடியும் என்னால்? — என் நெஞ்சிலே சஞ்சரித்த வஞ்சியை! என் உள்ள ஆசனத்திலே அமர்ந்திருந்த அழகுத் தெய்வத்தை எழிற்பதுமையை! என்னை 'அத்தான், அத்தான்' என்று ஆ

(8-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)
பொற்பதுமையின் பதிலையறிய! ...ட்டித் தங்கத்தைக் கட்டித் தழுவ! முல்லைக் கொடியாளின் மோகனக் கன்னங்களை முத்தமிட!—வேல்விழியாளின் செவ்வுதடுகளைச் சுவைக்க! அன்பு மொழியாளை, ஆசைக்கினியாளை அழகு மனைவியாகப் பெற!......

நண்பா! சந்திராவைச் சந்திக்க முயன்றேன். அவள் என் கண்ணிலே படவில்லை. வீட்டை விட்டு வெளியே வரவேயில்லை! விசாரித்ததில் வியாதியாயிருக்கிறாள் என்று தெரிந்துகொண்டேன். சில நாட்கள் கழிந்தன.

அன்றிரவு மணி பனிரெண்டடித்தது. தூங்காமல் படுக்கையிலே புரண்டுகொண்டிருந்த நான் எழுந்து உட்கார்ந்தேன். என் சந்திராவைச் சந்திக்கச் சரியான நேரமென்று தெரிந்தது. எப்படியாவது அன்றிரவு அவளைச் சந்திக்கத் திட்டம் போட்டேன். நெடுநேரம் நான் படுக்கையிலே உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை. என் கால்கள் தங்கள் வேலையைச் செய்தன. அந்த வெண்ணிலாவின் தண்ணொளியிலே நடந்தேன் என் வண்ணப் பதுமையின் பங்களாவிற்கு! பங்களாவை யடைந்தேன். நிசப்தம் நிலவிக் கொண்டிருந்தது. என் இருதயத்துடிப்புச் சத்தத்தைத் தவிர வேறெந்த சத்தமும் கேட்கவில்லை. பூனையைப் போல அடியெடுத்து வைத்து என் அழகுராணி அயர்ந்துறங்கிக்கொண்டிருந்த அறையையடைந்தேன் ......அவளருகே சென்றேன். மங்கொளி பெற்றுத் தங்கமெனத் திகழ்ந்துகொண்டிருந்தது அவள் உடல். புன்னகை அரும்பிக் கொண்டிருந்தது அவள் பவள அதரங்களிலே. அந்த மெல்லிய இதழ்கள் அவள் கரிய கண்களை மறைத்துக் கொண்டிருந்தன, நண்பா! அந்தக் கருவிழிகளைக்காணத் துடித்தேன் நான்!

"சந்திரா!..." என்றேன். தட்டியெழுப்பினேன். அவள் எழுந்திருக்கவில்லை.

நண்பா! அவளை வாரியணைத்துக்கொண்டே அவள் சிவந்த கன்னங்களையும் செல்வதரங்களையும் சுவைத்தேன்!—முதல் முத்தத்தையளித்தேன்!......

"சந்திரா!....;சந்திரா!......." என்று பல முறைக் கூப்பிட்டேன். தட்டியெழுப்பினேன்.

நண்பா! அவள் எழுந்திருக்கவில்லை! பதில் பேசவில்லை! ஆம். நண்பா!...என் அழகுத் தெய்வம் அயர்ந்த நித்திரையிலல்ல! நித்திய நித்திரையிலிருந்தாள்!—இருக்கிறாள்!......

ஆம். அவள் தற்கொலை புரிந்துகொண்டு விட்டாள்!...... நான் சிறிது நேரத்திற்கு முன்பாக அங்குச் சென்றிருந்தால் அவளைத் தடுத்திருக்கலாம் நண்பா!...நண்பா! நான் அவளுக்களித்த முதல் முத்தம்தான் கடைசி முத்தமாகவுமாகிவிட்டது!

"ஐயோ! சந்திரா! சந்திரா!...." கத்திவிட்டேன் தோழா! உறங்கிக்கொண்டிருந்தவர்கள் விழுந்தடித்துக்கொண்டு வந்தார்கள். என்னைச் சூழ்ந்து நின்றுகொண்டார்கள். "ஐயோ! சந்திரா! என் கண்ணே!...."இந்த அழுகுரல்களும், "டேய் கொலை பாதகா!....அழுது பாசாங்கு செய்கிறாயா?......" இந்த ஆணவக் குரல்களும், 'பளார்' 'பளார்' என்று என் கன்னங்களிலும் கழுத்திலும் விழுந்த அடிச்சத்தங்களும் விடாது சில வினாடி நேரம் கேட்டன!

ஆம். நண்பா! நான் கொலைகாரனும். சந்திராவுக்கு விஷங் கொடுத்துக் கொன்றேனும்!.... நண்பா!...அவர்கள் கூற்றுக் கேற்றவாறு என் சட்டைப் பையில் விஷங்கொண்ட ஒரு சிறு சீசா இருந்தது!...வியப்பிலும் வியப்பாயிருந்தது எனக்கு!....ஆம். நண்பா! நான் என் சந்திராவை வாரியணைத்து முத்தமிட்ட பொழுது அவள் உள்ளங்கையிலே மறைந்து கிடந்த அந்தப் புட்டி என் சட்டைப் பையில் விழுந்து விட்டிருக்கிறது!...நண்பா! நான் உண்மையை விளக்கமாக உரைத்தேன்! உலகம் ஒப்புக் கொள்ளவில்லை!

அதனால்தான் நான் உன்னோடு இந்தச் சிறையில் கைதியாக—கொலைகாரனாக இருக்கிறேன்! இதுதான் நண்பா அந்தச் சோகவரலாறு!........

கண்ணீரோடு கதையைக் கூறி முடித்து குமாரின் தோளில் சாய்ந்தேன்.

"டேய் 243! 229! ரெண்டு பேரும் வேலை செய்யாம அந்த மரத்தடியிலே உட்கார்ந்துகிட்டு யாரைக் கொல்ல திட்டம் போடுறீங்க?......போய் கல்லுடைங்கடா கவாலிப்பயகளா!...." வார்டர் தூரத்திலிருந்து கொண்டே வசை விருத்தம் பாடினர்!

இருவரும் எழுந்து கல்லுடைக்கச் சென்றோம்!


## பாலைவனம்

இராதாமணாளனின் புதிய எழுத்தோவியம்.
உண்ண உண்ணத் தெவிட்டாதது கருத்து அள்ளும் செஞ்சுவைத் தேனமுது.
விலை அணா 10

## பழி

தி. மு. க. தலைமைக்கழக அலுவலர்
நா. இராசவேல்
தீட்டிய சிறுகதைச் சித்திரம்
சுவை மிக்கது.
பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு, சென்னை.
விலை அணா 4

# ருஷ்யாவில் விவசாயம்

## அன்றும்—இன்றும்

[தே. பா. சம்பந்தன்.]

"கால் வயிறு காணுமா ஐயா நீ கொடுக்கும் அரிசி?" என்ற அதிருப்தி அலைகள் ஓர்புறம். "அதற்குமேல் அளந்தளிக்க வல்லேன் அல்லேன்" என்று அகம் குழைய பதிகம் பாடும் உணவமைச்சர் மற்றோர் புறம்!

"பசி பசி" என்று கூக்குரலிடும் மக்கள் ஓர்புறம். பட்டப்பகலிலே வீதிகளிலும், முச்சந்திகளிலும் பகிரங்கமாக நடக்கும் 'பிள்ளைப் பேரம்' மற்றோர் புறம்!!

கலப்பை, மணவெட்டி, அரிவாள், மாடுகள் ஆகியவைகள் சகிதம் தன் சிறிய நிலம் நோக்கித் தள்ளாடித் தள்ளாடிச் செல்லும் விவசாயி ஓர்புறம். "பஞ்சம் ஒழியவேண்டுமானால், சுபிட்சம் நிலவவேண்டுமானால் பெருக்குங்கள் உற்பத்தியை" என்று உபதேசம் புரியும் ஊராளும் குரல்கள் மற்றோர்புறம்!!!

இவைகளுக்கிடையே கிடைத்த புளியங்கொட்டையையும், வேண்டாத கற்றாழைச் சோற்றையும் தின்று பசி போக்கும் மக்கள், அதுகூடக் கிடைக்காத காரணத்தால் விடை பெற்றுக்கொள்ளும் பரிதாபத்திற்குரிய சீவன்கள்!

"என் தாய்நாட்டின்மேல் மாற்றான் படை எடுத்து வந்தான். நான் என் மகனைப் போர்க்களத்திற்குத் துரத்தினேன். அவன், களத்தில், மாற்றான் வேல் மார்பில் பாய மாண்டுபோனான்" என்று முக மலர்ச்சியோடு பேசிய தாய்மார்கள் பிறந்த நாட்டில், "என் தலைவர் போருக்குச் சென்றார். தோற்றபின் மாற்றானுக்கு மண்டியிடுவதா? மார்பில் கத்தியைப் பாய்ச்சிக் கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டார்" என்று வார்த்தைகளில் வீரம் விளையாடப் பேசிய தலைவிகள் வாழ்ந்த நாட்டில், "பசி-சி என்று துடித்து மாண்டாயே கனே, ஏனடா நீ இந்தப் பாழும் வயிற்றில் பிறந்தாய்? வேறு எங்காவது நீ பிறந்திருக்கக் கூடாதா? நீ பட்டுடை உடுத்திப் பாங்காக வாழவேண்டியதில்லை. கால்வயிறு கஞ்சிக்காவது கவலையில்லாது வாழ்ந்தால் அதுவே போதுமே, நான் கண்குளிரப் பார்ப்பேனே, இல்லை, நான் இறந்து நீ வாழக்கூடாதா? ஐயோ தெய்வமே, உனக்குக் கண்ணில்லையா?" என்று தாய் தன் மகனைப் பசிக்குப் பலி கொடுத்து விட்டு அழவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நாட்டில் மக்கள் மாள்கிறார்கள், போர்ப்பாதையில் இறங்கிய காரணத்தால் அல்ல; பட்டினிப் பாதையில் சென்ற காரணத்தால்!

அன்று 'சோழவளநாடு சோறுடைத்து' என்று புகழ்ந்து பேசப்பட்ட இந்நாடு, இன்று பசிப் பட்டாளம், பட்டினிச்சாவு ஆகியவைகளுக்கு இடமாக ஆகியிருக்கிறது!

அன்று பசிக்கும் பட்டினிக்கும் பெயரெடுத்த ரஷ்யா, இன்று 'சோவியத்வளநாடு சோறுடைத்து' என்று கூறவேண்டிய நிலையை அடைந்து விட்டிருக்கிறது!!

இது எப்படி? மந்திர சக்தியினாலா? அல்லவே அல்ல. மக்கள் சக்தியால். அதுவும் நம் போன்ற மக்களால். அதிசயமாகத்தான் இருக்கும். ஆனாலும் உண்மை! நம்பமுடியாததாகத்தான் தோன்றும். ஆனால் நம்பக்கூடாததல்ல!!

பழைய ரஷ்யாவில் குதிரை' எருது ஆகியவைகள் பூட்டப்பெற்ற கலப்பை, அரிவாள் போன்ற கருவிகளின் துணைகொண்டுதான் விவசாயம் நடத்தப் பட்டு வந்தது. நம் நாட்டைப் போல் அங்கும் நிலம் சிறிய சிறிய துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு நாடு முழுவதும் சிதறிக் கிடந்தது. எனவே அவற்றின் விளைச்சல் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாட்டாமல் இருந்தது. 205.000,000 ஏக்கர் நிலம் 10,500 000 துண்டு நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. 30,000 பிரபுக்கள் வசத்தில் தலைக்குச் சுமார் 6750 ஏக்கர் வளநிலம் சிக்கிக் கிடந்தது. அவர்களுடைய கவலையெல்லாம் விளைவைப் பற்றிய மட்டில்தான். எனவே இவ்வளவு விரிவான நிலம் அவர்கள வசம் இருந்த போதிலும், அவற்றை அவர்கள் துண்டு துண்டாகப் (பல விவசாயிகளுக்கு) குத்தகைக்கு விட்டுவந்தனர். வயலில் விளைந்ததில் பாதி, பிரபு வீட்டுக் களஞ்சியத்தில் போய்க் குவிந்தது. இந்நிலையில் நாளெல்லாம உழைத்துப் பயிரிடுப
வன் தலையெடுப்பதெங்கே? அவன்
வாழ்க்கை வறுமை என்ற கரை
யானால் அரிக்கப்பட்டு வந்த
நேற்றுவரை நன்றாக இருந்த வீ
இன்று (சில மணி நேரம் கூ
அல்ல, சில நிமிட நேரங்கள்தான்
ஏற்பட்ட பூமிஅதிர்ச்சியின் கார
மாக, இடிந்து, சரிந்து குட்டிச் சு
ராக ஆகிவிடுவதில்லையா? இந்
சக்தி இயற்கைக்கு மட்டுமல்
மனிதனுக்கும் கூட உண்
போலும். இல்லாவிட்டால் ருஷ்
நாட்டில் அவ்வளவு பெரிய செ
துளிப்பு எப்படித் தோன்றும்?

"உழுபவனுக்கே நிலத்தை
மையாக்கு. நிலப் பிரபுக்களு
நஷ்ட ஈடு தராதே" என்று மக்
நாடெங்கும் கிளர்ச்சி செய்த
அவர்கள முயற்சி வீண்போ
வில்லை. 1917-ல் அக்டோபர் 2
நாள் அரசாங்கம் 381, 250,
ஏகர் நிலங்களை மக்கள் வசம்
தது-இலவசமாகவே!

பெரிய பெரிய நிலச் சுவான்
களிடமிருந்து நிலங்களைப் பி
அதை உழுபவர்களுக்கே அ
விட்டால், பணம் படைத்த
நிலச் சுவான்தார்கள் ஏழை
சாயிகளிடமிருந்து அதே நில

(10-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் முறை அழைத்துக்கொண்டிருந்த என் ஆசைக்கினியாளை! முல்லைக்கொடியாளை! கிள்ளை மொழியாளை!......ஆம். அவளை நினைத்துக்கொண்டேன்! ஏங்குகிறேன்!—ஆண்டவனை நினைத்து அடியார்கள் ஏங்குவதைப் போல! ....'' உளறினேன்!—உள்ளக்கொதிப்போடு!

'காதல் விஷயமா தோழா!.... நீ ஒரு ரோமியோ; காயஸ் கூடவா?....'' நாசுக்காகக் கேட்டான் நண்பன். நான் மௌனஞ் சாதித்தேன்.

"நண்பா! அந்த வரலாற்றை நான் அறிந்துகொள்ளலாமா?...'' வகையாகக் கேட்டான். வேதனையைக் கிளறினான். சிந்தனைக்கிளியை "அந்தப் பழங்களை'' நன்றாகக் கொத்தச் செய்தான்.

"ஏனப்பா என் வேதனையைக் கிளறுகிறாய்? வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறாய்?... உன் வேலையைப் பார்த்துக் கொண்டு நீ போயேன்!...'' மனதிற்குள் இப்படி முனகிக் கொண்டே,

"அது எதற்கு நண்பா இப்பொழுது?....'' என்றேன்.

"அப்படியானால் சொல்ல மாட்டாயா நண்பா!...'' விடாது வேண்டினான்.

நான் பதில பேசாது உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

"நண்பா!......'' தொந்தரவு படுத்தினான். துரிதப்படுத்தினான்.

நான் சிந்தனையில் மூழ்கிச் சிலையைப் போல உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

"நண்பா!....'' மீண்டும் வேண்டினான்.

"ம்?...என்ன கேட்டாய்?...'' சுய வுணர்வுபெற்றேன்.

"என்ன தோழா?......உன் காதுகள் செவிடாகி விட்டனவா?...அல்லது உன் சிந்தனை சிறகடித்துக் கொண்டு பறந்து விட்டதா?......'' கேலியாகக் கேட்டான் குமார்.

"ஆம் நண்பா! என் சிந்தனை சிறகடித்துக் கொண்டு பறந்து விட்டது!......இன்று இந்த வேப்பமரத்தடியில் உட்கார்ந்ததும் அன்றொரு நாளிரவு என் அழகுத் தெய்வத்துடன் ஒரு வேப்பமரத்தடியில் உட்கார்ந்து அன்பு மொழி பேசிச் சல்லாபித்துக் கொண்டிருந்த சித்திரம் என் மனக்கண் முன் தோன்றுகிறது தோழா!....அன்று அவளுக்கும் எனக்குமிடையே எழுந்த உரையாடல்!...ஆஹா! நான் என்றும் மறக்க முடியாதது தோழா!...அவள் என்னிடம் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தாள். அப்பொழுது,

"என்ன இருந்தாலும் நான் ... ...'' என்று இழுத்தேன்.

"ஆண் மகன்; அறிவாற்றல் படைத்தவன்; அஞ்சா நெஞ்சம் படைத்தவன் என்று சொல்லுகிறீர்களா?......'' என்றாள் அவள்.

"இல்லை. இழி சாதியைச் சேர்ந்தவன். ஏழை என்று... ....''

"சமூகம் கூறுகிறதே என்கிறீர்களா?...''

"சந்திரா!....சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளையாக சொகுசுடன் சிங்கார மாளிகையில் வளரும்—வாழும் நீ எங்கே? தொழிலாளியின் தனயனைத் தட்டு வீட்டிலே வறுமை வியாதியோடு வாழும் நானெங்கே? ......கோபுரமெங்கே? குப்பை மேடெங்கே? மலையெங்கே? மடுவு எங்கே?...''

"என்ற பேதம் காதலரிடையே கிடையாதல்லவா அன்பரே!...காதற் பாறையின் மீது சாதிபேதமும், இன பேதமும் முட்டிமோதிப் பார்க்கலாம்; ஆனால் வெற்றிகாண முடியாது!......''

"சந்திரா!......அப் பாறை பனிக்கட்டியாகி விட்டால்?—ஆக்கப்பட்டால்?''

"அப்பாறை பனிக்கட்டியாகாது!......ஆக்கவும் முடியாது யாராலும்!...நீங்கள் அஞ்சாதீர்கள் அத்தான்!''

நண்பா!.......உரையாடலை நிறுத்திவிட்டு விழியாடலைத் துவக்கினாள் வஞ்சி. 'அன்பரே' 'அன்பே' 'காதலரே' 'கண்ணே' என்றெல்லாம் விளித்துக் கொண்டன எங்கள் விழிகள்!—தங்கள் மொழியில்!... ...நான் அவள் மலர்க்கரங்களைப் பற்றினேன். அவள் என் மார்பிலே சாய்ந்தாள்!........மென்காற்று வீசிக்கொண்டிருந்தது!—வெண் சாமரத்தின் வேலையைச் செய்து கொண்ருந்தன வேப்பங்கிளைகள்! காய்ந்த சருகுகளையும் பூக்களையும் மலர்மாரியென எங்கள் மீது அந்த மரம் பொழிந்தது! பரந்த வானம் பன்னீரெனத் தெளித்ததுக் கொண்டிருந்தது முத்துநீரை!......அந்தச் சுகத்திலே லயித்து மெய்மறந்திருந்தோம் என் கண்ணனையாளும் நானும்!

நண்பா!..... அப்பொழுது சற்று தூரத்திலே காலடிச் சத்தங்கேட்டது! இருவரும் துள்ளியெழுந்தோம், எங்களைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே வேகமாக நடந்துகொண்டிருந்தது ஒரு உருவம்! அவன்,

"எங்கள் வீட்டு வேலைக்காரன்!...' என்றாள்.

"அவன் உன் பெற்றோரிடம்......''

"கூறட்டுமே!....''

"பிறகு.......''

"அவர்களென்ன செய்கிறார்களோ செய்யட்டுமே!.......''

"என்னால் உனக்கு......''

"இல்லையில்லை.......ஒன்றும் வாது!......நீங்கள் சஞ்சலப்

படவேண்டாம் அத்தான்!....”

நண்பா! துணிவாக, தைரியத்துடன் பேசினாள் என் சந்திரா!...

நாட்கள் நகர்ந்தன. என் சந்திரா கூண்டுக் கிளியாகிவிட்டாள்! — ஆக்கப்பட்டாள்!— பெற்றோரின் பலவந்தப்போக்கால்! பேயாட்டப் பேச்சால்!... ஆம். நண்பா!...தங்கள் ஒரே மகள்—முதலியார் குலத்திலே பிறந்த மாணிக்கம்,—மூட்டை சுமக்கும் முனியனின் மகனை மனமுவந்து காதலிக்கிறாள்; மணாளனாகப் பெற விரும்புகிறாள்; இழிசாதிக்காரனைப்— பறையனைப் பதியாகப் பெறப் பிரயாசப் படுகிறாளென்பவைகளெல்லாம் தெரிந்துவிட்டன அவள் பெற்றோருக்கு!....அவள் மீது அவள் பெற்றோர் எறிந்த ஆத்திர அம்புகள்! ஆவேச பாணங்கள், வசை வெடிகள், அடக்குமுறைக் கணைகள்!...அப்பப்பா!....சொல்லிமுடியாதவை! ...நண்பா! அவை அவ்வளவும் என்னை அவள் விரும்பியதால் கிடைத்தவை!........எனினும் அவள் திடமனத்தை அசைக்க முடியவில்லை அவர்களால்! அவள் உள்ளத்திரையிலிருந்து என் உருவத்தை வெளியேற்ற முடியவில்லை அவர்களால்! விடாப்பிடியாகவிருந்த என் உள்ள ராணியை வீட்டில் வைத்து, வாட்டி வேதனைப் படுத்தத்தான் முடிந்தது அவர்களால்!.......நண்பா! எனக்காக அவள் அனுபவித்த...சகித்துக் கொண்டிருந்த துன்பங்களெவ்வளவு தெரியுமா?.......

முன்போல சந்திரா இப்பொழுது வெளியே வருவது கிடையாது!—வர அனுமதி கிடையாது! வழியும்கிடையாது! —அவள் பள்ளிப் படிப்பு நிறுத்தப்பட்ட காரணத்தால்!...

முடங்கல் தீட்டமட்டும் அவள் மறப்பதில்லை!...நண்பா, அவள் எழுத்துக்களிலே எவ்வளவு வீரம்! உருக்கம்! துக்கம்! துணிவு!.....வேதனையால் வாடிக் கொண்டிருந்த எனக்கு ஓரளவிலே ஆறுதலையளித்தன என் ஆசைக் காதலியின் அந்த அஞ்சல்கள்!......

நண்பா!......அன்று வந்த அஞ்சல் ஆறுதலையளிக்கவில்லை. வேதனைத்தீயை என் உள்ளத்திலே கொழுந்துவிட்டெரியச் செய்தது! ஆம். என் சந்திரா இன்னொருவனின் சொந்த சொத்தாக்கப்படப் போவதை அறிவித்தது அந்தக் கடிதம்!... நண்பா! அந்தக் கடிதத்தைக் கண்ணீரால் நனைத்திருந்தாள் என் கண்போன்றாள்!......“அத்தான்!...என்னாலானவரை நான் முயன்றுவிட்டேன்! நம் முன்னேற்றப்பாதையிலே குறுக்கே கிடக்கும் இந்த முட்டுக்கட்டைகளையகற்ற முடியவில்லை என்னால்!......விவாகமே வேண்டாமென்று வேண்டினேன்! விம்மினேன்! உள்ளத்தை வெளிப்படுத்தி விளக்கமாக உரைத்தேன்! கெஞ்சினேன்.

கேட்கவில்லை என் பெற்றோர்! இந்த அபலையின் அவக்குரல் ஏறவில்லை ஈயமடைக்கப்பட்ட அவர்கள் காதுகளிலே! இந்த ஏழையின் அழுகுரலுக்கு உருகவில்லை அவர்கள் இரும்புள்ளங்கள்!......அத்தான்! நான் உங்களை மறந்துவிட வேண்டுமாம். மற்றொருவனின் மனைவியாக வேண்டுமாம். ஐயோ! அத்தான்.......” என்று எழுதியிருந்தாள் நண்பா!

கடிதத்தைப் படித்தேன். என் கருத்து கலங்கிற்று. குழம்பிற்று! கண்ணீர் கசிந்தது! “கண்ணே உனக்குக் கலியாணமா? நீ இன்னொருவனின் இல்லக்கிழத்தியாகப் போகிறாயா?..........” என்று புலம்பினேன். புரண்டு புரண்டழுதேன். பேயறைந்தவனானேன். பித்தனானேன்!.......

நண்பா! அவள் அம்மியை மிதித்தாள். நான் நெருப்பை மிதித்தேன்!......துயரத் தீயை! அவள் அருந்ததியைப் பார்த்தாள்!—மணப் பந்தலுக்குள்ளேயே! நான், அவள் பெயரைக் கொண்ட சந்திரனைப் பார்த்து ஏங்கினேன்! அவள் கணவன் அரசாணிக் காலிலே மஞ்சள் கயிற்றைக் கட்டினான், நான் அரசமரக்கிளையிலே பாளைக் கயிற்றைச் சுருக்கிட்டேன்!...... ஆனால் தொடர்ந்து வேலையை நடத்தமுடியவில்லை! தோழனொருவன் குறுக்கிட்டுத் தடுத்து விட்டான்.

* * *

நண்பா! அந்தப் பூங்காவிலே உட்கார்ந்து கொண்டு, தாமரை தடாகத்திலே தெரிந்த சந்திரனின் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கையிலே சந்திராவின் புகைப்படமொன்றை வைத்துக் கொண்டிருந்தேன். சிந்தனை எங்கெங்கோ சென்றது. அளவுக்குமிஞ்சி வேலை செய்தது.

“சந்திரனைப் பார்க்கலாம்; ஆனால் அணுகமுடியாது! அதன் நிழலைத்தான் அணுக முடியும்!.. ஆம். சந்திராவைப் பார்க்கலாம்; ஆனால்அணுகமுடியாது! அணைத்துக்கொள்ள முடியாது!— கூடாது!...அவள் புகைப்படத்தைத்தான் அணுக, முத்தமிட முடியும்! “மனதிற்குள் இப்படி முனகிக்கொண்டே அப்புகைப் படத்தைப் பார்த்து, “சந்திரா” .......என்றேன்.

“அத்தான்!”—பதில் வந்தது பின்புறத்திலிருந்து! திடுக்கிட்டேன். திரும்பிப் பார்த்தேன். நண்பா, சந்திரா நின்று கொண்டிருந்தாள் பொற்பதுமை

(12-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விலைக்கு வாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்று நம்பலாமா? நம்ப இடம் இருக்கிறதா? அப்படி அவர்கள் நிலங்களை விலைபேசி வாங்கிவிட்டால் முதலாளித்துவம் மறு 'அவதாரம்' எடுத்து விட்டது என்றுதானே ஆகும். எனவேதான் அரசாங்கம் இத்தகைய இடரைத் தடுக்க நிலங்களைத் தேசிய மயமாக்கி விட்டது. நிலங்களைப் பயிரிட்டுக் கொள்ளும் உரிமையை விவசாயிகளுக்களித்து விட்டு, கூலிக்கு வேலைக்காரர்களை அமர்த்துவது என்ற முறையையே சட்ட விரோதமாக்கி விட்டது. அத்துடன் தேவையான அளவிற்குக் கடனாகப் பணமும் அளித்து அரசாங்கம் விவசாயிகளுக்கு ஒத்தாசை செய்தது.

ஆனால் அக்டோபர் புரட்சி அவர்களுடைய குறைகளையெல்லாம் தீர்த்துவிட்டது என்று கூற இடமில்லை. ஏனென்றால் புரட்சிக்குப் பின்பும் விவசாயிகள் பழைய பாணியிலேயே நிலத்தைத் துண்டு துண்டாக விளைவு செய்து வந்தனர். அது மட்டுமல்லாமல் பணக்காரன் ஏழை என்ற பாகுபாடு வாழ்ந்து கொண்டுதான் வந்தது. பணக்கார விவசாயிகள் (Kulaks) வலையில் ஏழை விவசாயிகள் சிக்கித் தத்தளித்துக் கொண்டுதான் இருந்தனர். விளைச்சல் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வந்தது. இன்று நம் நாட்டில் கேட்கிறதே இதே போலப் 'பசி பசி' என்ற கூக்குரல்கள் நாட்டின் நாலு பக்கங்களினின்றும் அங்கும் கிளம்பின. 'பஞ்சம் ஒழிய வேண்டுமானால், சுபிட்சம் நிலவ வேண்டுமானால் பெருக்குங்கள் உற்பத்தியை' என்று உபதேசம் புரிகிறார்களே நம்மையாள வந்தவர்கள், அப்படிச் செய்யவில்லை சோவியத் அரசாங்கம். "கூட்டுப் பண்ணை முறையால், சிறு சிறு துண்டுகளாகப் பயிரிடுவதற்குப் பதிலாக, எல்லோரும் ஒன்றாக இணைந்து, பரந்த நிலத்தை எல்லோருக்கும் பொதுவான விலையுயர்ந்த இயந்திரச் சாதனங்களைக் கொண்டு பயிரிடுங்கள், நாட்டில் உணவு நெருக்கடி தலை தூக்குகிறதா பார்ப்போம்" என்று உறுதியான குரலில் நல்லதோர் பாதையைக் காட்டிற்று சோவியத் அரசாங்கம். கூட்டுப் பண்ணை முறையைப் பற்றித் தம் கருத்தைத் தெரிவிக்க நேர்ந்த போது லெனின், "விவசாயிகள் நிலை மிக மிக மோசமானதாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர்களைக் கலந்து, ஒப்புதல் பெறாமல் நாம எந்தவிதமான திட்டத்தையும் அவர்களிடையே திணிக்க முயலக்கூடாது. அப்படி முயன்றோமானால் கூட்டுப்பண்ணை முறையின் ஜீவசக்தியே நசித்துப்போய்விடும். ஆனால் அரசாங்கம் கூட்டுப் பண்ணை முறையை மக்களிடையே பரவச் செய்யத் தன் சக்தியைப் பயன்படுத்தத் தவறக்கூடாது. விவசாயிகளுக்குப் பணம், இயந்திரம் முதலான எல்லா வசதிகளையும செய்துதரத் தயாராக இருக்க வேண்டும். கூட்டுப் பண்ணை முறையை அரசாங்கமே அனுசரிப்பதன் மூலம் அதன் உன்னதத்தை மக்கள் புரிந்துகொள்ளச் செய்யவேண்டும்." என்றார். அதன்படியே அரசாங்கம்,! அரசாங்கப் பண்ணை' (Soukhos) கள் மூலம் பருத்தி, தானியம் முதலியவைகளைப் பெரிய அளவில் பயிரிட்டு மக்கள் ஆர்வத்தைத் தூண்டி விட்டது. இந்த அரசாங்கப் பண்ணைகள்தான் சோவியத் மக்களுக்கு டிராக்டரை அறிமுகம் செய்தவை. மக்களால் துவக்கப்பெற்ற கூட்டுப் பண்ணைகளுக்குச் சோவியத் அரசாங்கப் பண்ணைகள் இயந்திரங்களை அளிப்பதன்மூலம் 'கைலாகு' கொடுத்துத் தூக்கின. ஆனால் மக்கள் கூட்டுப் பண்ணை முறையின் மகத்துவத்தை உணர்ந்துகொள்ள நெடுநாள் பிடிக்கவில்லை. சோவியத் நாட்டின் கூட்டுறவு இயக்கத்தின் (Co-operative movement) வளர்ச்சி, மக்களைக் கூட்டுப் பண்ணை முறைக்குத் தகுதியுடையவர்களாகத் தயார்செய்து தந்தது.

விவசாயிகள் துண்டு துண்டாக நிலத்தைப் பங்கு போட்டுக் கொண்டு பயிரிடுவதைவிட, பெரிய அளவில் பயிர் செய்வதுதான் இலாபகரமானது என்பதை விரைவில் உணர்ந்தனர். பெரிய அளவில் விவசாயம் செய்வோம் என்று ஆரம்பித்துவிட்டால் கலப்பையும், குதிரையும் பயன்படுமா? எனவே குதிரை, கலப்பை, அரிவாள், மண்வெட்டி ஆகியவைகளுக்குச் 'சீட்டு கிழிக்கப்பட்டது. பெரிய பெரிய இயந்திரங்கள் நிலங்களில் உலாவரலாயின. கரம்பாகக் கிடந்தவை அனைத்தும் கழனியாக்கப்பட்டன. விளைச்சல் முன்னைவிட 50 சத விகிதம அதிகமாயிற்று!

முதன் முதலில் இந்தியாவில் இரயில் வண்டி ஓட்டப்பட்ட போது பலர் வெற்றிலை, பழம், பாக்கு சூடம் ஆகியவற்றோடு 'தரிசனம்' செய்யப் புறப்பட்டார்களாம். அதே போல ரஷ்யாவில் முதன் முதலில் டிராக்டர்கள் ஓட ஆரம்பித்தவுடன் மக்கள் 'இதென்னபேயா? பூதமா? பிசாசா?' என்று பீதியோடு கேட்டார்களாம்!

1927-ல் உக்ரைன் பகுதியில் அரசாங்கத்தாரால் சோவியத் இயந்திர டிராக்டர் ஸ்டேஷன்' என்ற பெயரில் (M.T.S.) ஸ்டாலினால் ஒரு அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அது உலகத்திலேயே உயர்ந்த டிராக்டர்களோடும், விவசாயத்திற்குத் தேவையான எல்லாப்பொருள்களோடும் கூடியது. சோவியத் குடியரசில் இன்று அத்தகைய 7000 M.T.S. கள் இருக்கின்றன.

டிராக்டர் முதலான இயந்திர சாதனங்கள் உதவியால் கூட்டுறவு முறையில் விவசாயிகள் பயிர் செய்து செழிப்பாக வாழ்வதைக் காணப் பொறாத சில பணக்கார விவசாயிகள் கத்தி, கம்பு, தீ ஆகியவைகள் துணையால் சாதாரண விவசாயிகளைத் தாக்கித் துன்புறுத்தினர். ஆனால் பணக்கார விவசாயிகளின் பொறாமையால் கூட்டுப் பண்ணை முறை பொசுங்கிப் போய் விடவில்லை. எப்படுப் பொசுங்கும்? காற்றால் காட்டுத் தீ அணைவதுண்டா?

கூட்டுப் பண்ணைகள் ஜனநாயக முறைப்படி தான் நிர்வகிக்கப்படுகின்றன. உறுப்பினர்கள் அனைவரும் கூடித் தங்களுக்குள் ஐந்து அல்லது ஒன்பது பேரைத் தேர்ந்தெடுத்து அந்த ஐந்து அல்லது ஒன்பது பேர்கொண்ட நிர்வாகக் குழு (Board of management)வை அமைக்கின்றனர். இக் குழு இரண்டு ஆண்டு வரை வேலை செய்யும். உறுப்பினர்கள் சார்பில் இக்குழுவே M,T S. உடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறதுடன், கூட்டுப் பண்ணைக்கு ஏற்படுகின்ற எல்லாக் கணக்குகளையும் இதுவே வைத்துக் கொள்ளுகிறது. வயலில் வேலைசெய்வோர் ஊதியத்தையும் இக் குழுவே நிர்ணயிக்கிறது. இவ்வூதியம், செய்யப்பட்ட வேலை

...ின் அளவையும் தன்மையையும் பொறுத்ததாகும்.

மொத்த வருவாயில், கூட்டுப் பண்ணைகள், விவசாய—வருமான வரி, உற்பத்திவரி, இன்சூரன்ஸ், அரசாங்கம் அளித்த கடன் தொகை. ஆகியவற்றை அரசாங்கத்திற் களிக்க வேண்டும். அத்துடன் ஒரு குறிப்பிட்ட அளவு விளைச்சலைக் கூட்டுப் பண்ணைகள் அரசாங்கத்திற்குக் கட்டாயம் விற்க வேண்டும், அரசாங்கம அதற்குரிய தொகையை விவசாயிகள் நிதியில் சேர்க்கும். இவ்வண்ணம் வாங்கிய உணவுப் பொருளை அரசாங்கம் நகர மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்பனை செய்யும். விற்றதுபோக எஞ்சியதை யுத்த காலத்திலும், அதற்குப் பின்னும் ஏற்படுகின்ற உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்குச் சேமித்து வைத்துக் கொள்ளும்.

மொத்த வருமானத்தில் கூட்டுப் பண்ணை 10 முதல் 20 சதவிகிதம் வரை நில சீர்திருத்தத்திற்காகப் பொருளை ஒதுக்க வேண்டும். அத்துடன் கல்வி வளர்ச்சிக்காகவும் அது ஒரு தொகை அளிக்க வேண்டும், இது வருவாயில் 2 சதவிகிதத்திற்கு மேற்படாது. வேலை செய்ய இயலாமல் போகிறவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் அது ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை ஒதுக்கக் கடமைப்பட்டது.

Fergana, Uzbekristan ஆகிய பகுதிகளில் 170 மைல் நீளமுள்ள நீர்ப்பாசனக் கால்வாயை உழவர்கள் தாங்களே 45 தினத்தில் கட்டிக்கொண்டனர் என்றால் கூட்டுப் பண்ணைமுறை எந்த அளவிற்கு அவர்கள் உள்ளத்தில் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளித்திருக்கின்றது என்பது விளக்கமாகும். இத்துடன் 17000 மைல் நீளமுள்ள 44 நீர்ப்பாசனக் கால்வாய்களையும் அவர்களே கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நிலத்திற்கு வேண்டிய உரங்களை, அந்தந்த நிலங்களின் தன்மைக்கேற்ப M.T.S. ஸ்தாபனமே உழவர்களுக்கு அளிக்கிறது. அதுமட்டுமல்லாமல் விஞ்ஞான முறைப்படிச் சுத்தம் செய்யப்பட்ட நல்ல விதைகளையும் அது உழவர்களுக்கு அளிக்கிறது.

கூட்டுப் பண்ணைமுறை அமுலுக்கு வந்த பின் கால்நடைகளின் நிலையும் பெரிய மாறுதலுக்குள்ளாகி இருக்கிறது. இன்றைக்கு ரஷ்யா தன்னிடம் ஆரோக்கியமுள்ள கால்நடை இருப்பதாகப் பெருமையுடன் கூறிக்கொள்ளத் தக்கச் சூழ் நிலையை உண்டாக்கியது கூட்டுப்பண்ணை வளர்ச்சிதான் என்பதை கூட்டுப் பண்ணை முறை பிறப்பதற்கு முன் ரஷ்ய கால்நடை இருந்த நிலையை உன்னிப் பார்ப்போர்க்கு விளக்கும்.

கூட்டுப் பண்ணை, நாட்டின் விவசாயிகளின் நிலையையே மறுகோலம் செய்திருக்கிறது. தானியங்களைச் சேர்த்து வைப்பதற்கு மிகப் பெரியக் களஞ்சியங்கள், ஆடுமாடுகள் வசிக்க அழகான கொட்டகைகள், இயந்திரங்கள் நிற்க நிழலிடங்கள், மில்கள், பாலடைப் பாக்டிரிகள், கிளப்புகள், தியேடர்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் ஆகியவைகளைத் தோற்றுவித்திருக்கிறது. இன்று சோவியத் கிராமங்களுக்குக் கிராமபோன், ரேடியோ, காமிரா, கடிகாரம், தையல் இயந்திரம் சைகிள், இசைக் கருவி ஆகிய ஆடம்பரப் பொருள்கள் ஏராளமாக நுழைகின்றன. கூட்டுப் பண்ணைகள், குழந்தை வளர்ப்பு நிலையங்கள், சிறுவர்களை வெளியூர்கட்கு அழைத்துச் சென்று காட்டிவரும் அமைப்பு, விளையாட்டு வெளிகள் ஆகியவைகளையும் எண்ணற்ற பள்ளிக்கூடங்களையும் விவசாய ஆராய்ச்சி நிலையங்களையும் நூல் நிலையங்களையும், படிப்பகங்களையும் உண்டாக்கி இருக்கின்றன. கிராமங்களில் பல வாலிபர் சங்கங்கள் தோன்றி இருக்கின்றன. இன்று தண்ணீர், மின்சாரம் ஆகிய வசதிகள் கூடிய இரண்டு முதல் எட்டடுக்குவரையுள்ள பெரிய கட்டிடங்களை கிராமப்புறத்தில் காண முடிகிறது.

விவசாயம் ஓர் சூதாட்டம் என்றிருந்த நினைப்பை மாற்றியமைத்த பெருமை கூட்டுப் பண்ணை முறைக்கே உரியதாகும். "இன்றையப் பொழுதைத் தள்ளிவிட்டோம். நாளையப் பொழுதை என்ன செய்வது என்ற கவலை அந்த நாட்டு மக்கள் மனதைவிட்டு அகன்றுவிட்டது. ஆனால் நம்முடைய நிலை அப்படியல்ல. அண்டு துண்டாகக் கிடக்கும் வளமிழந்த வயல்கள், நம் முன்னோர் கண்டுபிடித்த பழைய காலக் கலப்பை, மாடுகள் ஆகியவற்றை நம்பிய விவசாயம், உபாத்தியாயர்இல்லாத வகுப்பு மாணவர்களைப்போல சதா 'புரட்சி' செய்யும் வயிறு ஆகியவற்றேடுதான் நாம் வாழ்கிறோம். நாம் இன்று எந்தப் பாதையில் செல்கிறேமோ, அதே பாதையில் அன்று சென்ற ரஷ்யா இன்று புதிய பாதையில் செல்கின்ற காரணத்தால் வளத்தோடு வாழ்கிறது.

புதிய பாதையில் செல்லும் ரஷ்யாவையும் பார்க்கிறோம். அதன் வளம் கொழித்த வாழ்வையும் பார்க்கின்றோம். ஆனல் நாட்டை, பலனுள்ள அந்தப் பாதையில் செலுத்த மறுக்கிறோம்.

அந்தப் பாதையை நாம் காட்டும் போது, மாஸ்கோ மாரியம்மனை, வர்ணனை செய்து, கம்யூனிஸ்ட் தெய்வம்வந்தாடச் செய்யும், அரசியல்பூசாரித்தனம் என்று எவரும் எண்ணத் தேவையில்லை.

நமக்கு முக்கியம் பாதை யாருடையது என்பதல்ல; பாங்கான வாழ்வுதான்.

தடாகத்திலுள்ள தண்ணீர் எந்த அளவில் உள்ளதோ, அந்த அளவிற்குத் தாமரை இலையும் தன்னை உயர்த்திக்கொள்கிறது. தடாகத்தின் மட்டம் உயர்ந்துகொண்டே போகத் தாமரை இலைமட்டும் உயராமல் போனல் நீரில் அமுழ்ந்தி, கொஞ்ச காலத்தில் அழுகிப்போகவும் நேரிடும்.

உலகமும் முன்னேறிக் கொண்டே போகிறது. நாமும் முன்னேறவேண்டும்; அப்படி இல்லாது பின்தங்கிப் போனல் நாம், நமது கலாசாரம் அனைத்தும் அழிந்து ஒழிய நேரிடும்!


**நீங்கள் படிக்கவேண்டிய**
**புதிய கருத்தோவியங்கள்**

| | ரு. | அ. |
|---|---|---|
| பழி | 0 | 4 |
| கமலினி | 0 | 4 |
| ஊருக்கு உழைத்தவர்கள் | 0 | 5 |
| மைத்திரிகாரி | 0 | 6 |
| எமிலி ஜோலா | 0 | 6 |
| அன்பழகன் ஆட்சி | 1 | 4 |
| வரலட்சுமியின் காதல் | 0 | 5 |
| கன்னியா விதவையா | 0 | 8 |
| சதிகார சமுதாயமே | 0 | 2 |
| வஞ்சகி | 0 | 8 |
| வாத்தியாரம்மா | 0 | 4 |
| அந்தப்புரம் | 0 | 12 |

**பகுத்தறிவுப் பாசறை**
147, பவழக்காரத் தெரு, சென்னை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மையென! புன்முறுவல் புரிந்தாள்.

"அத்தான்!...இதோ சந்திராவின் நிஜ உருவம்!"

.........கடைக் கண்களால் பார்த்தாள். அந்தக் கண் வீச்சிலே காதல் களி நடம் புரிந்தது!....தான் மற்றொருவனின் மனைவியென்பதை மறந்து விட்டாள் போலும்!.......

"அத்தான்!" என்றாள் மீண்டும்.

"சந்திரா!......நீ எங்கே வந்தாய்?"....நான் கேட்டேன்.

"சிறிது சோமாவது சிறையிலிருந்து விடுதலை பெற்று சிங்கார வனத்திலே உங்களுடன் சல்லாபிக்க........" நாசுக்காகக் கூறியபடி என்னை நெருங்கினாள்.

"சந்திரா!...நீ போய்விடு....போ....நெருங்காதே. நீ என் சொத்தல்ல. பிறனொருவனின் பொருள்...என்னை நீ மறந்துவிடு! மறந்துவிட்டிருக்க வேண்டும்! இல்லையென்றால் இனி மறந்துவிடவேண்டும்!...'' கடுமையாகப் பேசினேன். நங்கையை என்னை நெருங்கவிடவில்லை.

"அத்தான்! நீங்களா பேசுகிறீர்கள்? அத்தான்! பெயருக்குத்தான் நான் பிறன் பொருள். உண்மையில் உங்கள் உடைமை நான்!...ஆம். அத்தான்! நாம் எங்காவது ஓடிப்போய் உல்லாசமாக......" உருக்கமாகப் பேசினாள்.

"சந்திரா!....இல்லை. நீ மற்றொருவனின் மனைவி! பத்தினியாயிரு! வீண் கனவுகள் காணாதே! விபசாரியாக விரும்பாதே! ...போ திரும்பிப்போ உன் கணவனிடம்...!" கடிந்துரைத்தேன்.

"அத்தான்......" மீண்டும் கெஞ்சினாள்.

"போ! திரும்பிப்போ!......" கத்தினேன்.

"யாருடா இவன்!...சுத்தப் பத்தியக்காரனாயிருக்கிறான்... அவரு திரும்பிப்போய் ரெண்டு நாளாயிடுச்சி! இன்னும் "திரும்பிப்போ"ன்னு உளறுறான்!"- ஜெயிலில் வார்டரின் இந்தக் குரலைக் கேட்டு எழுந்தேன் கண்களைத் துடைத்தேன். கனவு தான் கண்டேனென்பதையறிந்தேன! படுக்கையிலிருந்து—ஒரு டவல்தான் படுக்கை; தலையணை எல்லாம்!—எழுந்தேன்.

"ஏய், இந்தாப்பா!...சும்மாயிருக்க முடியலியா உன்னாலே?.........கனவிலேகூடவா "திரும்பிப்போ" எங்கிற ஒன் தாரக மந்திரத்தைச் சொல்லணும்?........அர்த்த ராத்திரியிலே ஆந்தை கத்தறமாதிரி...."சிறைக் கம்பிகளுக்கு வெளியே அந்தச் சுந்தர புருஷர் நின்றுகொண்டு வசை புராணம் பாடினர்.

ஆம். நண்பா!......வடநாட்டாட்சிக்கு வக்காலத்துப் பேசிக்கொண்டு, "அசல் விபீடனராக" ஆட்சிப் பீடத்திலே அமர்ந்திருக்கும் ஒரு டில்லி மந்திரி நம் நகருக்கு வந்த பொழுது நம் வெறுப்பையும் அதிருப்தியையுங் காட்ட, கருப்புக்கொடி காட்டி "டில்லி மந்திரியே, திரும்பிப்போ!" என்றேன். ஆனால் அவர் அன்று திரும்பிப் போகவில்லை! நானும் திரும்பிப்போகவில்லை என் வீட்டிற்கு!—சிறைக்கோட்டம் புகுந்தேன்.

நண்பா! இரண்டு வாரங்களைக் கழித்தேன் "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை"யிலே!.....

அன்று விடுதலையடைந்தேன். ஒரு செய்தி என்னைத் திகைப்பிலும் துக்கத்திலும் ஆழ்த்தக் காத்துக்கொண்டிருந்தது! எதிர்பாராத செய்தி! என்னை அதிர வைத்தச் செய்தி!..........ஆம். சந்திராவின் கழுத்திலே மின்னிக்கொண்டிருந்த அந்த மஞ்சள் கயிறு மறைந்துவிட்டது! நகைகள் நழுவிவிட்டன! நண்பா! அவள் வெள்ளைப் புடவைக்காரியாகிவிட்டாள்!....திருமணம் நடந்து ஒரு மாதங்கூட கழியவில்லை! கணவனை யிழந்தாள் கோதை! கைம்பெண்ணாகிவிட்டாள் கன்னிப்பருவத்திலே!......

"இப்பொழுது அவள் ஒருவன் சொத்தல்ல! யார் சொத்துமல்ல!.......யார் சொத்தாகவும் முடியாதாம்! ஆகவுங் கூடாதாம்!...."

"ஏன் அவள் ஒருவன் சொத்தாக முடியாது?—ஆகக்கூடாது?...அவளிடம் என்ன குறையிருக்கிறது? இல்லறம் நடத்துவதற்கு எந்த முறையில் அவள் அருகதையற்றவள்?...." இந்தக் கேள்விகளை விடாது என் உள்ளம் கேட்டுக்கொண்டேயிருந்தது.

"வரண்டுகிடக்கும் அவள் வாழ்வை நீ ஏன் வளப்படுத்தக்கூடாது? அவள் பெற்றோரும் ஊரும் உன்னை அனுமதிக்காதே என்று பார்க்கிறாயா?....அவள் ஒப்புக்கொண்டால் போதும். உன் அபிப்பிராயத்தை அவளிடம் அறிவி! அவள் ஒப்புக்கொள்ளுவாள். பிறகு, பதிவுத் திருமணம் புரிந்துகொள்!..." என் மனம் மணப்பாதைக்கு வழிகாட்டிற்று! — புத்திபுகட்டிற்று!

நண்பா! நான் அந்தப் புத்திமதிகளை எடுத்துக்கொண்டேன்! வகையாக வளமான வாழ்க்கை நடத்தவேண்டிய சந்திரா விதவையாகவே வாழாது என் உள்ள இராணியாக வாழ வேண்டுமென்று விரும்பினேன்!......எனக்கு அநியாயம் புரிந்தவளென்று அவளை துச்சமாகவோ, எச்சிற்பாண்டமாகவே நான் மதிக்கவில்லை! கைம்பெண்ணின் கணவனாவதா என்று நான் கருதவில்லை!...... துடித்தேன்! — துடியிடையாளிடம் என் திட்டத்தைக் கூற!—

(6-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டை உத்தரவு பிறப்பித்திருக்கி ர்கள்.

எண்ணற்ற ஊர்களில், எண் ற்ற முறை பொதுக் கூட்டங் ளுக்குத் தடை விதித்திருக்கி ர்கள்.

எழுத்துரிமை.

பேச்சுரிமை.

ந்த இரண்டு உரிமைகளையும் றிக்கும் முறையிலே ஆட்சியா ர்கள் இதுவரை எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள், வ்வொரு ஜனநாயக வாதி யின் உள்ளத்தையும் பதறவைக் கும்—அவ்வளவு ஏராளம்.

எனவேதான், இன்பத் திரா விடத்தின் இலட்சிய கீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம், சில மாதங்களுக்கு முன் னால், இந்த இரண்டு உரிமை களையும் நிலைநாட்டுவதற்கான போராட்டங்களை மேற்கொள் வது என்று முடிவு செய்தது.

1. திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டங்களுக்கு எந்த ஊரிலாவது 144 போடப்பட்டால், கழகத் தோழர்கள் அந்தத் தடை உத்தரவை மீறி, பொதுக்கூட்டம் நடத்தி, பேச்சுரிமையை நிலைநாட்டவேண்டும்.

2. தலைமைக் கழகத்தின் அனுமதி பெற்று, ஆங்காங்குள்ள தி. மு. க. கிளைக் கழகங்கள், தடை செய்யப்பட்ட நாடகங்களை நடத்துவது, தடுக்கப்பட்ட புத்தகங்களைப் படித்துக்காட்டுவது ஆகிய முறைகளின் மூலமாக எழுத்துரிமையை நிலைநாட்டவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு, கழகத் தோழர்களுக்கு இட்ட கட்டளைகள், இவை

இந்தக் கட்டளைகளுக்கு இணங்க, சென்னை, குன்றத்தூர், நாரணமங்கலம் ஆகிய இடங்களில் கழகக் கூட்டங்களுக்கு 144 விதிக்கப்பட்ட போது, அந்தத் தடை உத்தரவைப் பற்றிய கவலை அணுவளவுமின்றி, கூட்டங்கள் நடத்தப்பட்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. கழகத் தோழர்களிற் பலர் இதன் காரணமாகச் சிறைக்கோட்டம் புகுந்தனர்; தடியடி பெற்று தியாகத் தழும்புகள் அடைந்தனர்; துப்பாக்கியால் சுடப்படும் துர்ப்பாக்கிய நிலைமைக்கும் உள்ளாயினர். ஆனால் இயக்கத் தோழர்கள் நடத்திய இந்தப் பேச்சுரிமைப் போராட்டத்தின் விளைவாக, இப்போதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டங்களுக்கு 144 விதிக்கப்படுவதில்லை. பேச்சுரிமைப் போராட்டம், உண்மையிலேயே, பெரியதோர் வெற்றியைத் திராவிட இனத்தவர்க்குத் தேடித்தந்துவிட்டது.

எப்படி சென்னை, குன்றத்தூர், நாரணமங்கலம் முதலிய இடங்களில் பேச்சுரிமைக்காகச் சிறந்ததோர் அறப்போர் நடத்தப்பட்டதோ அதுபோலவே, வடார்க்காடு மாவட்டம் முழுதிலேயும், எழுத்துரிமையை நிலைநாட்டுவதற்காக மார்ச் முதல் தேதியன்று போர்க்கொடியை உயர்த்துவது என்று அந்த மாவட்டத்து முன்னேற்றக் கழகம் முடிவுசெய்து, களத்தில் இறங்கிற்று.

போர், பகைவரும் கண்டு போற்றும் விதத்திலே, அமைதியாக—ஆனால் அற்புதமான வெற்றியைத் திராவிட சமுதாயத்திற்கு அளிக்கும் விதத்ததாக நடைபெற்றிருக்கிறது.

ஒரே நாளில், வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணற்ற ஊர்களில், ஆட்சியாளர்களால் தடை செய்யப்பட்டிருக்கும் ஏடுகளில் முக்கியமானதும், அறிஞர் அண்ணா அவர்களால் இயற்றப்பட்டதுமாகிய "ஆரிய மாயை", பல்லாயிரக் கணக்கான மக்கள் நிறைந்த பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாகப் படித்துக் காட்டப்பட்டது.

வேலூர், திருப்பத்தூர், திருவத்திபுரம் போன்ற நகரங்களில் மட்டுமல்ல, உக்கல், தேசூர், அம்மையப் பட்டு முதலிய சின்னஞ் சிறு கிராமங்களில்கூட, எழுத்துரிமைப் போர், சிறப்பான முறையில் நடைபெற்றிருக்கிறது.

இவ்வாறாக, எண்ணற்ற ஊர்களில், தடைசெய்யப்பட்டுள்ள "ஆரியமாயை", ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் வெளிப்படையாகப் படித்துக் காட்டப்பட்டுத் தடை உத்தரவு தூள்தூளாக்கப் பட்டும் கூட, ஓர் இடத்திலாவது, தடையை மீறிய திராவிட இளைஞரேறுகளைக் கைது செய்யும் துணிவு ஆளவந்தார்களுக்கு ஏற்பட வில்லை.

போராட்டம் மகத்தான வெற்றி பெற்றுவிட்டது.

எழுத்துரிமைக்கு விதிக்கப் பட்ட தடை செல்லாக்காசாக் கப்பட்டு விட்டது.

எந்த ஏடு மக்களிடையே உலவுவதே தீது என்று ஆட்சியாளர்களால் தடுக்கப்பட்டதோ அந்த ஏடு, ஆயிரமாயிரம் மக்களிடையே, மார்ச் முதல் நாளன்று வெற்றிப் புன்னகையுடன் வீர உலா வந்துவிட்டது.

வடார்க்காடு மாவட்டம், எழுத்துரிமைப் போர்க் களத்தில் முதற்பரிசு பெற்றுவிட்டது.

வாழ்த்துகிறோம் வடார்க்காடு மாவட்டத்தை. வாழ்த்துகிறோம் போராட்டத்தை முன்னின்று நடத்திவைத்த அந்த மாவட்டத்துத் தளபதிகளை. வாழ்த்துகிறோம் போராட்டத்தில் புன்முறுவலுடன் ஈடுபட்டுப் பெரியதோர் வெற்றியை நமக்குநாட்டித் தந்துள்ள தி. மு. க. இளஞ் சிங்கங்களை!

—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இராமசாமி அவர்கள், சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்துப் பட்டிதொட்டிகளில் எல்லாம் பிரசாரம் செய்து, வீழ்ச்சியுற்ற நம் இனம் மீட்சி பெற என்போன்ற இளைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார். பற்பல கொடுமைகளுக்கு இடையே பகுத்தறிவுப் படை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது; வருகிறது. இடையில் விலை மதிக்க முடியாத பல உயிர்களையும் விலை கொடுக்க வேண்டியதாயிற்று. ஆங்கிலேய ஆட்சியின் நிலையையும், உலக விடுதலைப் போராட்டங்களையும், நம் பகுத்தறிவுப் படைகளின் பிரசாரம் காட்டுத் தீ போல பரவுவதையும் கண்டு கலக்கம் அடைந்த ஆரியம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பாமர மக்களிடத்தில் நம்மைப் பதவி மோகக்காரர்கள் என்றும், சதிகாரர்கள். என்றும், காட்டிக் கொடுப்பவர்கள் என்றும் கூறி ஏமாற்றி, ஏமாந்த அவர்களின் உதவியால் ஏற்றம் கொண்டு, 'வெள்ளையரை வெளியேற்றும்' நாடகம் நடத்தி இந்நாட்டு அரசியலில் அரியணை ஏறியது. அந்நாள் நமக்குத் தாங்க ஒண்ணுதத் துக்க நாள் ஆகும்.

### காங்கிரஸ் அரியணை ஏறிய நாள் முதல்...

அரியணை ஏறியநாள் முதல் அது செய்யும் அட்டகாசம் ஏட்டில் அடங்காது. மக்களுக்கு இழைக்கும் கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. ஆதிக்கத்தைக் கைப்பற்ற மக்களை என்னென்ன சொல்லி ஏமாற்றினார்களோ அதற்கு நேர் மாறாக நடந்துவருகிறது இன்றைய ஆட்சி. நாம் முன்னே கூறியபடி உலகத்தின் மடமைக் கூட்டம் ஒன்றுசேர்ந்து முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் முன்னணிப் படையில் நம் நாட்டு அரசியல் ஆட்சிக் குழுவும் சேர்ந்துவிட்டது என்றே நாம் கருதவேண்டும். வெள்ளையர்கள் வெளியேற்றப் பட்டார்களே தவிர, வெள்ளை ஏகாதிபத்திய உணர்ச்சி இந்த ஆரிய ஏகாதிபத்திய வெறியுள் தாண்டவம் ஆடுகிறது. இதன் காரணமான காமன்வெல்தைக் கைவிடாது, முழு சுதந்திர சர்க்காராக இல்லாது-பாதுகாப்பு சர்க்காராக இருப்பதும் இதனாலேயேயாகும்!

உலகத்தில் விடுதலை அடைந்தும் நாடுகள் எல்லாம் ஏகாதிபத்திய வெறியை உதறித்தள்ளி சமதர்மக் குடியரசு அமைப்பின் மூலம் கலை, நாகரீக, மொழி, இன விடுதலை அளித்து வருகிறது. பல இன வேறுபாடு உடைய நம் நாடோ எனில் சகல அதிகாரங்களையும் ஆதிக்க வெறிபிடித்த மத்திய சர்க்காரே ஏற்றுக்கொண்டு, மொழிவழி மாகாணங்களைக்கூட அமைக்காமலும், பல இன மக்களைப் பஞ்சாயத்துச் சர்க்காராக வைத்துக் கைக்கூலிகளாக ஆக்கிவைத்தும் இருக்கிறது. ஆதிக்க வெறி கொண்ட மத்திய ஆட்சியின் அக்கறைக்குப் புறம்பாக ஒரு சிறு சட்டத்தையும் செய்ய முடியாத சீரழிவு நிலை ஏற்பட்டுச் சஞ்சலம் அடைய வேண்டி இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு மாற்றம் இல்லாது அதை ஆதரிக்கும் மக்களுடைய மாகாணங்களை மட்டும் செல்லப் பிள்ளைகளாக வளர்க்கும் நிலைக்கும் இதுவே காரணமாகும். இதனாலேதான் சகல வளமும் பொருந்திய திராவிட நாட்டில் சோற்றுக்குப் பஞ்சம் வந்து செத்து மடிய வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது.

### உணவுத் திண்டாட்டம்

வடநாடு பெரிதும் கோதுமை தின்போருடையதும், தென்நாடு முழுக்க அரிசி உணவு உண்போர் உடையதும் ஆகும். கோ[துமைப்] பஞ்சம் ஏற்படும்பொழு[து] அரிசியை அவர்களுக்கு அதி[க]மாகக் கொடுத்தும் நமக்கு குறைவாகக் கொடுத்தும் கட்ட[ாய]ப் படுத்தும் நிலை இருக்கிறது. கோதுமைக்குப் பஞ்சம் ஏற்ப[ட்]டால் ஆஸ்டிரேலியாவில் இரு[ந்]தும், அமெரிக்காவில் இருந்து[ம்] அவசர அவசரமாகக்கோதுமை தருவிக்கும் அதே மத்திய சர்[க்]கார், அண்டையில் இருக்கும் பர்மா, பாகிஸ்தான் முதலிய நாடுகளில் அரிசி அதிகமாகக் கிடைத்தும் அரிசி தின்னும் நம்மைப்பட்டினி போட்டுக்கொல்ல நினைக்கும் கொடுமைதான் என்ன? இதை ஏன் இன்னும் மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரோடு போராடித் தீர்க்கக் கூடாது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வளம் பொருந்திய நம் நாட்டில் ஏன் உணவுப் பஞ்சம் என்று கேட்டால் கடவுள் கோபித்துக் கொண்டதால் மழை வரவில்லை என்கிறார்கள் இந்த மடமை ஆட்சியிலே! விஞ்ஞான வளர்ச்சியால் மேகங்களை ஒன்று கூட்டி மழையைத் தருவிக்கும் இம் மனித முன்னேற்ற நாகரீக காலத்தின் பின்னும், நாம் 'கடவுள் கோபித்துக் கொண்டு மழையை உண்டாக்கவில்லை' என்றும், 'யாகாதிகருமங்கள் மூலம் எம்பெருமானின் கிருபையை நாடிக் கோபத்தைத் தணித்து மழையைப் பெற வேண்டுமென்றும்' நினைக்கிற நிலையில் இருக்கிறோம். இத்தகைய மடமைக்குப் பலியாக இந்த நாடு ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றவரையில் மனிதப் பூண்டு அற்றுப்போக வேண்டியதுதான்!

### ஏன் இந்த ஏமாற்றம்?

இவர்கள் செயல் எவ்வளவு ஏமாற்றுதலானது என்று எண்ணிப் பாருங்கள். கடவுள்

கோபித்துக்கொண்டு மழையை வரவழைக்காது இருந்தால், அதே கடவுளால் படைக்கப்பட்ட 18 கோடி ரஷ்ய மக்களும், 50 கோடி சீன மக்களும் அந்தக் கடவுளைக் கொஞ்சம்கூட மதிக்காதுஇருந்தும் ஏன் அவர்கள் பேரில் கோபித்துக் கொள்ளவில்லை? இவர்கள் ஆட்சியில் ஏன் இந்த அலங்கோலம் என்று கேட்டால் "இந்த சர்க்கார் 3 வயது குழந்தைதானே! இதற்குள்ளே இதை எல்லாம் எதிர்பார்க்கலாமா" என்று கூறுகிறார்கள். இதற்காக இவர்களைப் பற்றி நாம் அனுதாபப் படுகிறோம். அண்டையில் இருக்கின்ற செஞ்சீனா 6 மாதக் குழந்தைதானே; அதன் நடத்தையைப் பார்த்தாவது இவர்கள் புரிந்துகொள்ளக் கூடாதா? 50 கோடி மக்கள் கொண்ட சீனா—சின்னா பின்னப்பட்டுக் கிடந்த சீனா—கஞ்சா அபின் மயக்கத்தில் கலங்கிக்கிடந்த, ஸ்யாங்கேஷேக்கின் சீர்கெட்ட ஆட்சியிலே செத்து மடிந்த சீனா, 6 மாத காலத்தில் உயிர்பெற்று—அறிவுடைய அதன் தலைவன் மா-சே-துங்கின் சீரமைப்பால் தன் மக்களுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து உண்டது போக 10 இலட்சம் டன் அரிசியை நமக்குத் தரக் காத்துக் கொண்டு இருக்கிறதே! இதைப் பற்றி என்ன சொல்ல முடியும் இந்த சர்க்கார்?

இந்தப் பஞ்சாயத்துச் சர்க்காரால் எப்பொழுது எந்த மக்களுக்குத்தான் நன்மை ஏற்பட்டு இருக்கிறது?

கூலி கேட்கும் தொழிலாளர்கள் தடியடி படுவதும், நேர்மையான வாழ்க்கையில் வாழ விரும்பும் நடுத்தர வகுப்பினர் நசுக்கப்படுவதும், பெண்டு பிள்ளைகள் மானம் இழக்கப்படுவதும், உரிமை உணர்ச்சி பறிபோவதும்மட்டுமல்லாமல், பேச்சுரிமை எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகியவைகள் பறிக்கப்படுவதும், உலகத்தில் நாகரீக சர்க்கார் எதுவும் காணாத முறையில் தொட்டதற்கு எல்லாம் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படுவதும், சிறையில் கொடுமை இழைக்கப்படுவதும் தவிர வேறு என்ன இவர்கள் ஆட்சியில் மக்கள் அடைந்த பலன்? ஒரு சிறு கொள்ளைக் கூட்டம் பட்டம் பதவிகளிலேயும், கள்ள மார்க்கெட்டின் கொள்ளை லாபங்களிலேயும் மூழ்கி, அதிகார வெறியால் கண் தெரியாமல் ஆதிக்க இறுமாப்புக்கொண்டு, அடக்கு முறையால் தலைவிரித்தாடுகிறது. அதனிடையே வடவர் வாழ்வு வளம்பெற, நாம் தாழ்வுறும்படியாக விளைபொருள்களும், உலோகப் பொருள்களும் பயன்படுத்தப்படுகிறது. பெரும் பெரும் தொழிற்சாலைகளும், வியாபாரங்களும் வடநாட்டிலேயே நிலை பெறத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. நாளுக்கு நாள் வடநாட்டுச் சந்தைக் கடையாகத் திராவிட நாடு மாற்றப் பட்டு வருகிறது. வடநாட்டின் எண்ணப்படி, கூலிகளும், குமாஸ்தாக்களும் கொடுத்து உதவும் பிரதேசமாகக் கொஞ்ச நாளில் திராவிடம் மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. ஆகையினால்தான் திராவிட இனம் நல் வாழ்வு பெறவேண்டுமானால் திராவிடநாடு இந்திய உபகண்ட அரசியல் பிணைக்கில் இருந்து விடுபட்டு ஒரு தனி நாடாக அமைந்தாகவேண்டும். அங்ஙனம் அமைந்தாலன்றி வேறு வழி இல்லை என்று நாம் கருதுகிறோம்.

**நம் பிரச்னை முடியாத பிரச்னையல்ல!**

இது முடியாத வெறும் பொய் வாதம் என்று கூறுகிறார்கள் இன்றைய ஆளவந்தார்கள். நம்மைவிட சிறு தொகை கொண்ட இனம், நாடு இவைகள் தனி அரசு புரிவது கண்கூடு. நம் அண்டையில்-அண்மையில் மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பிரிந்த பாகிஸ்தான், ஒரு மாகாணமாக இருந்த பர்மா, இலங்கை ஆகியவை தலை நிமிர்ந்து நடப்பதைக் காண்கிறோம். அவைகளைப்பற்றிப் பன்முறை மேடைகளில் விளக்கிக் கூறியும், எழுதியும் வருகிறோம். இவைகள் ஒன்றும் ஆளவந்தார்களுக்கும் அவர்தம் ஆதரவாளர்களுக்கும் விளங்குவதாகத் தோன்றவில்லை. நாம் பலாத்காரத்தில் துளிகூட நம்பிக்கை இல்லாதவர்கள். இந்த நாட்டுச் சூழ்நிலையும் அதற்கு ஏற்றது அல்ல. நமக்கு உள்ள ஓரே ஒரு வழி பட்டிதொட்டிகளில் எல்லாம் பகுத்தறிவுப் பிரசாரத்தின் மூலம் அறிவைப் பெருக்கித் திராவிடத் தனி சமதர்மக் குடிஅரசு காண்பதாகும்.

திராவிட நாட்டை வடநாட்டான் சந்தைக்கடையாக மாற்றத் திட்டமிட்டு ஆட்சியைத் தங்கள் நலனுக்குப்பயன்படுத்துவோரும், அவருடைய தாசர்களான சில தென்னாட்டாரும் நம் மீது சீறிப்பாய்வதும், நம்மைப் பல வழிகளில் அடக்கப் பார்ப்பதும் எதிர்பார்த்ததே யாகும். எவ்வளவு அடக்குமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் தன்னலமற்ற இளங்காளைகளின் ஈடும் எடுப்பும் அற்ற தியாகத் தழும்புகளால் இனி, அரசியல், பொருளாதார சமுதாயக் கிளர்ச்சிகளும், புரட்சியும் திராவிடத் தனி அரசு அமையும் விதத்தில் ஏற்பட்டே தீரும்.

**வள்ளுவர் வழி**

வகுப்பு உரிமைக்கு வஞ்சனை ஏற்பட்டபோதும், வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு முயற்சியை அரசியலார் அடக்கப் பார்க்கும் நிலையிலும், வடநாட்டு ஆதிக்க வெறியர் தென்னாட்டில் காலெ

டுத்து வைக்கும் பொழுதெல்லாம் மக்களிடையே எழுந்த மன எழுச்சியும், இளங்காளைகளின் தியாக உணர்ச்சியும் நம் உயர் நோக்கத்திற்கும், வீரத்துக்கும் போதிய சான்றாகும்.

சட்ட வரம்புக்கு உட்பட்ட சகல கிளர்ச்சிகளின் மூலம் வடநாட்டுத் தொடர்பிலிருந்து விடுபட அறிஞர் அண்ணாத்துரையும் நீங்களும் இம் மாநாட்டில் வழிகாட்ட வேண்டும். திராவிடத் தனி சமதர்மக் குடிஅரசு ஏற்பட்டால் மக்கள் உண்ணப் போதுமான உணவும், உடையும் இருப்பிடமும் பெறுவதோடு மட்டும் அல்லாமல், அறிவும் பெருகும். அணுக்குண்டின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டக் கனவு காண்கின்ற அமெரிக்காவைவிட அரியமுறையில் வள்ளுவன் வழியில் உலகம் முழுவதும் நிலைபெற்ற சமாதானம் ஏற்படச் செய்யமுடியும். சண்டையைத் தூண்டிச் சமாதானத்தைக் குலைக்கும் உலக முதலாளி வெறியர்களின் கொட்டம் அடக்கும் முறையிலே, அகில உலகத்திலும் அன்பு, அறிவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உலக சமாதானப் பெரும் படையில் சேரும் வாய்ப்புப் பெறுவோம். 4½ கோடி மக்களின் உயிரைக் கொடுத்தேனும் நம் எதிர்கால மக்கள் திராவிடச் சமதர்மக் குடி அரசில் நல்வாழ்வு பெற்றுத் திகழ எல்லாவிதத் தியாகப் பரிசோதனைகட்கும் அஞ்சாமல் ஆணைக்கு எதிர்பார்த்து நிற்போமாக.

"வாழ்க திராவிடம்"
"வெல்க சமதர்மம்"
"பரவுக பகுத்தறிவுப்பிரசாரம்"
நிலவுக சமாதானம்.


# வகுப்புரிமைப் போராட்டம்

## கம்யூனல் ஜி. ஓ. பற்றிய விளக்க நூல்

ஆசிரியர்: க. அன்பழகன் எம்.ஏ.,

★

* கம்யூனல் ஜி. ஓ. என்ற வகுப்பு நீதிச் சட்டம் தோன்றிய காரணம் வளர்ந்த வகை.
* அதனால் திராவிட மக்கள் பெற்ற நன்மைகள், வசதிகள்.
* அதைக்கண்டு ஆதிக்க வெறியர் அடைந்த ஆத்திரம், சதிச் செயல்கள், தொடுத்த போராட்டங்கள்.
* அந்தப் போராட்டங்களால் திராவிட இனத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, ஒற்றுமைப் பண்பு,
* திராவிட இயக்கத் தோற்ற முதல் முரசு, பார்ப்பனரல்லாத மக்களின் பேராதரவு,
* டாக்டர் C. நடேசன், சர். தியாகராயர், டாக்டர் T. M. நாயர் வ. உ. சிதம்பரனார், பெரியார் ஈ. வெ.ரா, S. முத்தையா, அறிஞர் அண்ணா ஆகியோர் வகுப்பு நீதியை நிலைநாட்டப்போராடிய தன்மை, அதன் விளைவுகள்,
* தேசிய காங்கிரஸ், தேசிய பத்திரிகைகள் இவற்றின் போர்வையில் நடைபெற்ற பிராம்மணீயப் பித்தலாட்டங்கள்,
* கம்யூனல் ஜி. ஓ. வும் கருப்புக்கண்ணாடியும், கம்யூனல் ஜி. ஓ. வும் பிரகாசமும், கம்யூனல் ஜி. ஓ. வும், இதர பார்ப்பனரும், கம்யூனல் ஜி. ஓ. வும் சாந்தியாரும், கம்யூனல் ஜி. ஓ.வும் ஓமந்தூராரும், கம்யூனல் ஜி. ஓ.வும் தற்கால மந்திரி சபையும் பற்றிய விளக்கம,
* தகுதி—திறமைகளின் தகிடுதத்தம்,
* நீதிமன்றத் தீர்ப்பு, அதனால் ஏற்பட்ட விளைவுகள்,
* இந்திய அரசியல் சட்டத்தின் அணைப்பிலே அல்லாடியாரும் அவர்தம் இனமும்,
* தகுதி—திறமையில் பார்ப்பனரல்லாத அறிஞர்கள் ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து விளங்கும் காட்சி,
* திராவிட இலட்சியப்பண் வளர்ந்த விதம்,
* மறுக்க முடியாத பலப்பல சான்றுகள்,
* ஏராளமான வகுப்புநீதி பற்றிய புள்ளி விவரங்கள்,

## இத்தனையும் விளக்கும் எழில்மிகு ஏடு.

மூதறிஞர் முத்தையா அவர்களின் அரிய முன்னுரையுடன் கூடியது

மாணவர், ஆசிரியர், தொழிலாளர், அரசியல் பணியாளர், பொதுமக்கள் அத்தனைபேரையும் சிந்திக்கத் தூண்டும் சிறந்த எழுத்தோவியம்.

**கம்யூனல் ஜி. ஓ. நிலைத்தால் திராவிட இனம் வாழும்**

என்பதைத் தெள்ளத் தெளிய உணர்த்துவது.

**200 பக்கங்கள்** **விலை ரூ. 1—12—0**

**பகுத்தறிவுப் பாசறை** பவழக்காரத் தெரு, சென்னை 1.


Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Kiea Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor: M. Ilancheliyan B. A.(Hons)